**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 165/2021**

**Deposition of P.W.** 13

Name : திரு. பாஸ்கரன்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated:24.09.2025**

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், மத்தியபாகம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு குலசேகரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றிய போது 20.04.2021ம் தேதி குலசேகரம் காவல்நிலைய குற்ற எண். 108/2021 பிரிவுகள் 294(பி), 307, இ.த.ச வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதிகாலை 01.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வன், முருகன் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர்அ.சா.ஆ.6, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7.பின்னர் சாட்சிகள் மஞ்சு, மணியன், ராஜேந்திர பிரசாத், ராஜு, ராஜேஷ், சந்தோஷ், முருகன், செல்வன், ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். 23.04.2021ம் தேதி சாட்சிகள் செந்தில், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமரேசன் ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.06.2021ம் தேதி நான் பணிமாறுதல் ஆகி சென்று விட்டபப்படியால் வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார் மனுவில் இன்று 19.04.2021ம் தேதி இரவு 10.00 மணியளவில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனுவின் படி காயம்பட்டவருக்கு தலையில் 2 இடங்களில் வெட்டுப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். 20.04.2021ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு புகார் மனு பெறப்பட்டது என்றால் சரிதான். சாட்சி மஞ்சு தனது வாக்குமூலத்தில் சுரேஷ்–ன் மனைவி 10 நாட்களுக்கு முன்பாக கடத்தப்பட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி மஞ்சுவை 20.04.2021ம் தேதி விசாரித்தேன் என்றால் சரிதான். சாட்சி மணியனும் அவரது வாக்குமூலத்தில் சுரேஷ்–ன் மனைவி 10 நாட்களுக்கு முன்பாக கடத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அவரையும் நான் 20.04.2021ம் தேதி விசாரித்தேன் என்றால் சரிதான். சாட்சி செந்தில் அவரது வாக்குமூலத்தில் தனது தலையில் 3 இடங்களில் வெட்டி காயப்படுத்தியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அவர் எனது விசாரணையில் சம்பவத்தின் போது மயங்கி விட்டதாகவும் மயக்கம் தெளியும் போது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாகவும் கூறியுள்ளார் என்றால் சரிதான் . எனது விசாரணையின் படி செந்திலுக்கு எப்போது சுயநினைவு வந்தது என்றால் தேதி மற்றும்

நேரம் எனக்குத் தெரியாது. 19.04.2021ம் தேதி கொரோனா காலம் என்றால் சரியாக ஞாபகமில்லை. கொரோனா காலக்கட்டத்தில் கடைகளை திறக்க தடை இருந்தது என்றால் சரிதான். மாதிரி வரைபடம் படி சுருளோடு, குலசேகரம் செல்லும் ரோட்டில் வலியாற்றுமுகம் செல்லும் சாலை திரும்பும் இடத்தில் சம்பவம் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். குலசேகரம் சுருளோடு சாலையின் மேற்கு பக்கம் என்றால் சரிதான். புகார் மனு காவல்நிலையத்தில் வைத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். புகார்மனு பெறுவதற்கு முன்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்றார்களா என்றால் இல்லை. வழக்கு தொடர்பாக புகார் மனு பெறுவதற்கு முன்னர் எந்த வேலையும் போலீசார் செய்யவில்லை சாட்சிகள் யாராவது போலீசார் வந்ததாக கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். காயம்பட்டவர் முதலில் குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி சிகிச்சை வழங்கிய பிறகு ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். பார்வை மகஜர் 20.04.2021ம் தேதி அதிகாலை 01.45 மணிக்கு தயார் செய்யப்பட்டது. சாட்சி மணியன் எனது விசாரணையில் எதிரிக்கும், காயம்பட்டவருக்கும் கைகலப்பு நடந்ததாக கூறவில்லை. போலீசார் சம்பவ இடத்திற்கு 10 நிமிடத்தில் வந்ததாகவும், போலீசாருக்கு எதிரியின் வீட்டையும், காயம்பட்டவர் வீட்டையும் காட்டி கொடுத்ததாக என்னிடம் கூறவில்லை. சாட்சி மணியன் என்னிடம் சம்பவ இடத்தில் வைத்து காயம்பட்ட செந்தில் சம்பவம் குறித்து போலீசாரிடம் கூறியதாக என்னிடம் கூறவில்லை. வழக்கு தொடர்பாக நான் சரிவர புலன்விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தயார் செய்த

ஆவணங்கள் வழக்கிற்காக காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது விசாரணை ஒருதலைப்பட்சமானது என்றால் சரியல்ல.

**Deposition of P.W.** 14

Name : திருமதி. உமா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:24**.09.2025**

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது வடசேரி காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது குலசேகரம் காவல்நிலைய குற்ற எண்.108/2021 பிரிவுகள் 294(பி), 324, 326, 307 இ.த.ச படியான வழக்கை 24.06.2021ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். சம்பவ இடம் ஏற்கனவே காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் போலவே இருந்ததால் நான் தனியாக பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. சாட்சிகள் மஞ்சு, செந்தில், மணியன், ராஜேந்திர பிரசாத், ராஜு, ராஜேஷ், சந்தோஷ் ஆகியவர்களை விசாரித்தேன். அவர்களும் ஏற்கனவே காவல்



ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இவ்வழக்கின் எதிரி சுரேஷ்

17.06.2021ம் தேதி முன் ஜாமீன் பெற்று பிணையில் இருந்தவரை 28.07.2021ம் தேதி 18.00 மணிக்கு குலசேகரம் காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகள் ராமையன், மணி, ஆகியவர்கள் முன்னிலையில் விசாரித்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் TN.74 W 1087 பஜாஜ் பாக்சர் இருசக்கர வாகனம் மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய வெட்டுக்கத்தியை எதிரியின் தம்பி வீட்டின் பின்புறத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8. அத்தாட்சி அ.சா.ஆ.9. படிவம் 95 அ.சா.அ.10. மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் இருசக்கர வாகனம் சா.பொ.1. வெட்டுக்கத்தி சா.பொ.2, 02.08.2021ம் தேதி சாட்சிகள் சஜின், பாக்கியராஜ், ராஜேந்திர பிரசாத் ஆகியவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.08.2021ம் தேதி சாட்சி 2க்கு சிகிச்சை வழங்கிய குலசேகாரம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. பிரைட்சிங் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். பின்னர் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவர் திரு. ராம்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். காயம்பட்ட நபருக்கு இருந்த காயம் கொடுங்காயம் என்பதால் வழக்கு சட்ட பிரிவை மாற்றம்



செய்து அறிக்கை சமர்பித்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.11, எனவே எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவத்திற்கு 13 நாட்களுக்கு முன்பு எதிரியின் மனைவியை கடந்ததி சென்றதாக குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சாட்சிகள் மஞ்சு, மணியன் ஆகியவர்கள் தங்கள் வாக்குமூலத்தில் எதிரியின் மனைவியை 10 நாட்களுக்கு முன்பு கடத்தி சென்றதாக வாக்குமூலங்கள் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகள் 20.04.2021ம் தேதி விசாரிக்கப்பட்டுள்ளார்கள். குற்ற இறுதிஅறிக்கையில் எதிரி அ.சா.2ஐ அடிக்கடி தொலைபேசியில் மிரட்டி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிரி எந்த தேதியில், எந்த நேரத்தில் அ.சா.2ஐ மிரட்டினார் என்பது சாட்சிகள் மூலம் துலங்கவில்லை என்றால் சரிதான். எதிரி மற்றும் அ.சா.2ன் தொலை பேசி எண்கள் விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். குற்ற இறுதிஅறிக்கையில் சாட்சி 2ன் பின்பக்க தலையில் 3 இடங்களில் வெட்டி காயப்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேறப்டி காயங்கள் எந்தெந்த இடங்களில் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல பின்னந்தலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். 3 காயங்களும் வெவ்வேறு காயங்கள் என்றால் சரிதான். மருத்துவர் திரு. பிரைட்சிங் காயம்பட்டவரின் தலையில் 2 காயங்களை பார்த்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். மருத்துவர் திரு. ராம்குமார் என்னுடைய வாக்குமூலத்தில் எத்தனை காயங்கள் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்



என்றால் வாக்குமூலத்தில் காயங்கள் பற்றி குறிப்பிடவில்லை. காயச்சான்றில் 2 காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. காயம்பட்டவருக்கு 3 காயங்கள் இருந்தது என்பது கோப்புகளிலிருந்து துலங்காது என்றால் சரிதான். சான்றுபொருள் கைப்பற்றப்பட்ட வீடு என்ன வகையான வீடு

என்று என்னால் தற்போது கூற இயலாது. சான்றுபொருட்களை கைப்பற்றிய இடத்தில் வைத்து அத்தாட்சி சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேனா என்றால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் வாங்கினேன். சான்றுபொருள் கைப்பற்றிய இடத்தில் சாட்சிகள் இல்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி சாட்சிகள் சான்றுபொருட்கள் கைப்பற்றப்பட்ட இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அத்தாட்சி பொருள் கைப்பற்றப்பட்ட இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.2, 3ம் பால்வெட்ட ஆள் கூப்பிடுவதற்காக எந்த ஊருக்கு சென்று வந்தார்கள் என்று என்னிடம் கூறவில்லை. சம்பவத்தின் போது அ.சா.2 மற்றும அ.சா.3 எந்த சாலையிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். சுருளோடு – குலசேகரம் ரோட்டில் மேற்கு பக்கம் நடைபெற்றது என்றால் சரிதான். வலியாற்றுமுகம் செல்லும் சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான். மின்வாரிய ஆவணங்களை பரிசீலிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி ராஜேந்திர பிரசாத் என்னிடம் எதிரி அ.சா.2ஐ மாறி மாறி வெட்டியதாக குறிப்பிட்டுள்ளார். எண்ணிக்கை குறிப்பிடவில்லை. காயம்பட்டவருக்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு சுயநினைவு திரும்பியது என்று எனது விசாரணையில் துலங்கவில்லை.

.5.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்னர் போலீசார் வழக்கு தொடர்பாக எந்த வேலையும் செய்யவில்லை. சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் 5 கி.மீ துாரத்தில் உள்ளது. போலீசார் சட்மபவ இடத்திற்கு 10 நிமிடத்தில் சென்றதாகவும் சாட்சி மணியன் போலீசாருக்கு எதிரியின் வீட்டையும் அ.சா.2ன் வீட்டையும் காட்டி கொடுத்ததாகவும் காயம்பட்ட நபர்

சம்பவ இடத்தில் வைத்தே போலீசாரிடம் சம்பவம் பற்றி கூறியதாகவும் என்னிடம் வாக்குமூலம் கொடுக்கவில்லை. ரத்தக்கறை படிந்த ஆடைகள் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட ஆயுதத்தில் ரத்தக்கறை இருந்ததாக குறிப்பிடப்படவில்லை., ஆயுதத்தை ரசாயான பரிசோதனைக்கு அனுப்பவில்லை. ஆயுதத்தில் ரத்தக்கறை இல்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்களும், சான்று பொருட்களும் வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.